வெவ்வேறு இடங்களில்

கோவையில் 2 பெண்களிடம் 8 பவுன் நகை பறிப்பு

வாலிபர் கைது; 3 பேர் தலைமறைவு

கோவை, ஆக.27- கோவை சாயிபாபா காலனி பி.என்.புதூரை சேர்ந்தவர் பெரியசாமி மனைவி வெள்ளையம்மாள் (22). இவர் நேற்று அங்குள்ள கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது பைக்கில் வந்த 2 மர்ம நபர்கள் திடீரென வெள்ளையம்மாள் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தங்க செயினை பறித்து தப்பி சென்றனர். புகாரையடுத்து, சாயிபாபா காலனி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

இதேபோல், கோவை வெள்ளலூர் அசோகர் தெருவை சேர்ந்தவர் மாதேஸ்வரன் மனைவி கண்ணம்மாள் (65). இவர் நேற்று மருதூர் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள மளிகைக்கடைக்கு சென்றார். பின்னர் அங்கு பால் வாங்கி விட்டு வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது பைக்கில் வந்த 2 பேர் கண்ணம்மாள் அணிந்திருந்த தங்க செயினை பறிக்க முயன்றனர். இதனால் அதிர்ச்சியடைந்த அவர் செயினை பறிக்க விடாமல் போராடினார். இதில் பாதி செயின் அறுந்து அவர் கையில் இருந்தது. மீதமுள்ள இரண்டேமுக்கால் பவுன் நகையுடன் மர்ம நபர்கள் தப்பி சென்றனர். புகாரின் பேரில், போத்தனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில், நகை பறித்து சென்றது ராமநாதபுரம் பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளிகள் சேதுபதி(37), சபரி(21), என்பது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் சேதுபதியை கைது செய்தனர். சபரியை தேடி வருகின்றனர்.

கோவையில் பெய்த கன மழையால் அரசு மருத்துவமனை வளாகத்தில் மழை வெள்ளம் புகுந்தது. இதை மோட்டார் வைத்து உறிஞ்சி லாரி மூலம் அகற்றினர்.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை

பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 5300 கனஅடியாக அதிகரிப்பு

பவானி ஆற்றில் உபரிநீர் திறப்பு

சத்தியமங்கலம், ஆக. 27- பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை தொடர்வதால், அணைக்கு நீர்வரத்து 5300 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால் உபரிநீர் பவானி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

105 அடி உயரமும், 32.8 டி எம் சி கொள்ளளவும் கொண்ட பவானிசாகர் அணை தமிழகத்தில் மேட்டூர் அணைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய அணையாக விளங்குகிறது. இந்த அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. 105 அடி உயரம் உள்ள பவானிசாகர் அணையில் தற்போதைய நீர்மட்டம் 102 அடியாக உள்ளது. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மலைப்பகுதி மற்றும் வடகேரளாவில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 3500 கன அடியாக இருந்த நிலையில் இன்று 5300 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரிப்பின் காரணமாக அணையின் பாதுகாப்பு கருதி பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் 3200 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்திற்காக 1800 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்கால் இரண்டிலும் சேர்த்து மொத்தம் 5000 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நீர் வரத்தை பொறுத்து அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு அவ்வப்போது மாறுபடும் என நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயணிகளின் கோரிக்கை ஏற்று

மேட்டுப்பாளையம்- நெல்லை வாராந்திர ரயில் நீட்டிப்பு

2023 ஜனவரி வரை இயக்கம்

பீளமேடு, ஆக. 27- ரயில் பயணிகளின் கோரிக்கையை ஏற்று மேட்டுப்பாளையம்-நெல்லை வாராந்திர ரயில் அடுத்த ஆண்டு ஜனவரி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேட்டுப்பாளையம்- கோவை- பொள்ளாச்சி- பழனி- திண்டுக்கல்- மதுரை- சிவகாசி- தென்காசி வழியாக நெல்லைக்கு வாராந்திர ரயில் இயக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவு 7.45 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் இருந்து புறப்படும் ரயில் மறுநாள் சனிக்கிழமை காலை 7.45 மணிக்கு நெல்லையை அடையும். மறுமார்க்கத்தில் நெல்லையிலிருந்து ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 7 மணிக்கு புறப்படும் ரயில் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு மேட்டுப்பாளையம் வந்தடையும். 3 மாத காலத்துக்கு மட்டுமே அறிவிக்கப்பட்ட இந்த ரயில் கடந்த ஜூலை மாதம் 8ம் தேதி முதல் ரத்து செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து பல்வேறு தரப்பினர் விடுத்த கோரிக்கையை ஏற்று அந்த ரயில் கடந்த 19ம் தேதி வரை 5 வார காலத்துக்கு இரண்டாவது முறையாக நீட்டிக்கப்பட்டது. அதை மீண்டும் நீட்டிக்க வேண்டும் என்று ரயில் பயணிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

அந்த கோரிக்கையை ஏற்று தென்னக ரயில்வே மேட்டுப்பாளையம்-நெல்லை வாராந்திர ரயிலை வருகிற செப்டம்பர் மாதம் 1ம் தேதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 27ம் தேதி வரை 5 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தென்னக ரயில்வே நேற்று வெளியிட்டது. அந்த ரயில் ஏற்கனவே இயக்கப்பட்ட நேரத்தின்படி இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை சுந்தராபுரத்தில் உள்ள திமுக முன்னாள் எம்.பி விடுதலை விரும்பி வீட்டிற்கு நேற்று சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், அவரிடம் நலம் விசாரித்தார். அருகில், அமைச்சர் செந்தில் பாலாஜி, கோவை மாநகராட்சி கவுன்சிலர் உதயகுமார் உள்ளனர்.

கோவை ரேஸ்கோர்சில்

தொழில் அதிபர் வீட்டில் ரூ. 16 லட்சம் கொள்ளை

சிவகங்கை வாலிபருக்கு வலை

கோவை, ஆக. 27- கோவை பாப்பநாயக்கன் பாளையம் ஜி.கே.டி நகரை சேர்ந்தவர் செல்வக்குமார்(56). தொழில் அதிபர்.

இவர், கோவையில் கட்டுமான பொருட்கள் விற்பனை நிறுவனம் நடத்தி வருகிறார். இவர் தனது வீட்டில் உள்ள அலமாரியில் ரூ. 20 லட்சம் வைத்திருந்தார். வியாபார நிமித்தமாக செல்வக்குமார் அதில் ரூ. 9 ஆயிரத்தை எடுத்து கொண்டு கடந்த 24ம் சென்னை சென்றார். பின்னர் அங்கிருந்து மறுநாள் கோவை திரும்பினார். வீட்டிற்கு திரும்பிய போது வீட்டு அலமாரியில் இருந்த ரூ. 16 லட்சத்து 3 ஆயிரத்தை காணவில்லை. அதற்கு அடியில் இருந்த ரூ. 3 லட்சத்து 88 ஆயிரம் அப்படியே இருந்தது. வீட்டு வேலைக்கு வந்து கொண்டிருந்த வாலிபர் ஒருவர் வரவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த செல்வக்குமார் தனது வீட்டில் இருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தார். அதில், வீட்டு வேலை செய்து வந்த சிவகங்கை மாவட்டத்தை சகாதேவன்(32) என்பவர் பணத்தை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது. இது குறித்து ரேஸ்கோர்ஸ் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மேலும் சகாதேவன் தனது சொந்த ஊரான சிவகங்கை மாவட்டத்துக்கு தப்பி சென்றிருக்கலாம் என தெரிகிறது. போலீசார் அவரை தேடி வருகின்றனர்.

கோபி அருகே நம்பியூரில்

அரசு பள்ளி மாணவிகளிடம் சில்மிஷம் கண்டக்டர் போக்சோ சட்டத்தில் கைது

கோபி, ஆக. 27- கோபி அருகே உள்ள குருமந்தூர் நடுப்பாளையத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது.

இந்த பள்ளியில் குருமந்தூர், நடுப்பாளையம், நம்பியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் கோபியில் இருந்து குருமந்தூர் வழியாக நம்பியூர் செல்லும் அரசு பஸ்சில் செல்வது வழக்கம். இந்த பஸ்சில், கோபி புதுக்காடு சின்னசாமி வீதியை சேர்ந்த சரவணன் (50) கண்டக்டராக பணியாற்றி வந்தார்.

கடந்த சில மாதங்களாகவே இவர் பணியில் இருந்தபோது பஸ்சில் வரும் 10க்கும் மேற்பட்ட மாணவிகளிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். இதுகுறித்து தகவல் அறிந்த மாணவிகளின் பெற்றோர் கண்டக்டர் சரவணனை எச்சரித்தனர். இதன் பின்னரும் அவர், சில்மிஷத்தை தொடர்ந்ததாக கூறப்படுகிறது.

கண்டக்டர் சரவணன்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவிகளின் பெற்றோர்கள், நேற்று அந்த பஸ்சை நம்பியூர் அருகே வழிமறித்து சிறைபிடித்து மறியலில் ஈடுபட்டனர். இவர்களிடம் நம்பியூர் போலீசார் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பொதுமக்கள், கண்டக்டர் சரவணனை கைது செய்தால் மட்டுமே போராட்டத்தை கைவிட முடியும் என கூறிவிட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து பெற்றோர்களிடம் புகாரை பெற்றுக்கொண்ட போலீசார், கண்டக்டரை காவல் நிலையம் அழைத்துச்சென்று போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர். கைதான கண்டக்டர் சரவணன், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பஸ்சில் வரும் பெண்களிடம், அவர்கள் வாங்கும் பயணச்சீட்டில் தனது செல்போன் எண்ணை எழுதி கொடுத்து வந்துள்ளார். இது குறித்து அப்போது புகார் வந்ததை தொடர்ந்து அவர் ஈரோட்டிற்கு பணி மாறுதல் செய்யப்பட்டார். இந்நிலையில் மாணவிகளிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டதால் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தறிகெட்டு ஓடிய கார் மோதி 2 பெண் தொழிலாளர்கள் பலி

பொள்ளாச்சி அருகே பரிதாபம்

பொள்ளாச்சி, ஆக. 27- பொள்ளாச்சி அருகே கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடிய கார் மோதி, 2 பெண் தொழிலாளர்கள் பலியானார்கள்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி நகரிலிருந்து பிரிந்து செல்லும் முக்கிய நெடுஞ்சாலைகள் விரிவுப்படுத்தப்பட்டு, அதன் நடுவே தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. இந்த தடுப்புச்சுவர்களில் வெவ்வேறு கட்டமாக கருப்பு, வெள்ளை வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று, பல்லடம் ரோடு புளியம்பட்டி வழியாக செல்லும் நெடுஞ்சாலையின் மையப்பகுதியில் அமைக்கப்பட்ட கான்கிரீட் தடுப்புச்சுவரில் வர்ணம் பூசும் பணியில் தொழிலாளர்கள் பலர் ஈடுபட்டனர்.

அப்போது பல்லடத்திலிருந்து பொள்ளாச்சி நோக்கி வந்த கார், புளியம்பட்டி அருகே கட்டுப்பாட்டை இழந்து ரோட்டின் நடுவே தடுப்புச்சுவரில் வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் 4 பேர் மீதும் மோதியதுடன், கான்கிரீட் டிவைடரில் மோதி கவிழ்ந்தது. இந்த விபத்தில் வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டிருந்த அங்கலக்குறிச்சியை சேர்ந்த மயிலாத்தாள் (55), ஈஸ்வரி (55), லட்சுமி (45), சரஸ்வதி (60) ஆகியோர் படுகாயமடைந்தனர். அப்பகுதியினர் படுகாயத்துடன் கிடந்த 4 பேரையும் மீட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஈஸ்வரி, மயிலாத்தாள் ஆகியோரை கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், செல்லும் வழியிலேயே அவர்கள் இறந்தனர். மற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மகாலிங்கபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, திருப்பூர் மாவட்டம் பல்லடம் வேலாம்பாளையத்தை சேர்ந்த கார் டிரைவர் விஜய் (24) என்பவரை கைது செய்தனர்.

பொள்ளாச்சி அருகே தடுப்பு சுவரில் மோதி கார் கவிழ்ந்து கிடக்கிறது. இந்த விபத்தில் 2 பெண்கள் உயிரிழந்தனர்.

அதிமுக முன்னாள் எம்எல்ஏவிடம் பணம் பறித்த கும்பலை பிடிக்க 3 தனிப்படைகள்

சத்தியமங்கலம், ஆக. 27- சத்தியமங்கலம் அருகே உள்ள புஜங்கனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஈஸ்வரன் (45).

அதிமுகவைச் சேர்ந்த இவர், கடந்த 2016 முதல் 2021 வரை பவானிசாகர் தொகுதி எம்எல்ஏவாக இருந்தார். இந்நிலையில் கடந்த 24ம் தேதி மதியம் ஈஸ்வரன் பவானிசாகர் அருகே பைக்கில் சென்றபோது ஒரு கும்பல் வழிமறித்து காரில் கடத்திச் சென்று அடித்து உதைத்து மிரட்டி ரூ.1.50 கோடி பணம் பறித்து சென்றது. இதுகுறித்து சத்தியமங்கலம் அரியப்பம்பாளையம் நேருநகர் பகுதியை சேர்ந்த முன்னாள் அதிமுக நிர்வாகி மிலிட்டரி சரவணன், மோகன் மற்றும் அடையாளம் தெரியாத 6 பேர் மீது ஈஸ்வரன் புஞ்சை புளியம்பட்டி போலீசில் புகார் செய்தார். இதைத் தொடர்ந்து முன்னாள் எம்எல்ஏவை கடத்தி பணம் பறித்த கும்பலை பிடிப்பதற்காக ஈரோடு எஸ்பி சசிமோகன் உத்தரவின்பேரில் சத்தியமங்கலம் டிஎஸ்பி சந்திரசேகர் மேற்பார்வையில் புஞ்சை புளியம்பட்டி இன்ஸ்பெக்டர் அன்பரசு தலைமையில் ஒரு தனிப்படையும், பங்களாபுதூர் இன்ஸ்பெக்டர் வடிவேல் குமார் தலைமையில் மற்றொரு தனிப்படையும், சத்தியமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் இந்திராணி சோபியா தலைமையில் ஒரு தனிப்படையும் என 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, கடத்தல் கும்பலை தேடி வருவதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கல்லூரி மாணவி மாயம்

சென்னிமலை, ஆக. 27- சென்னிமலை அடுத்துள்ள பாப்பான்காடு பகுதியை சேர்ந்த 20 வயது கல்லூரி மாணவி, ஈரோடு திண்டலில் உள்ள கல்லூரியில் பி.காம் 3ம் ஆண்டு படித்து வந்தார். கடந்த 23ம் தேதி வழக்கம் போல கல்லூரிக்கு சென்ற மாணவி மாலையில் வீடு திரும்பவில்லை. போலீசார் விசாரிக்கின்றனர்.

அரசுப் பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள்

சிறப்பாக விமர்சனம் செய்யும் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலா

தொடக்க கல்வி இயக்குனர் சுற்றறிக்கை

வேலூர், ஆக.27- தமிழகம் முழுவதும் உள்ள அரசுப்பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு, இந்த திரைப்படங்கள் குறித்து சிறப்பாக விமர்சனம் செய்யும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு சுற்றுலா அழைத்துச்செல்லப்படுவார்கள் என தமிழக அரசு அறிவித்திருந்தது.

இதுகுறித்து தொடக்க கல்வி இயக்குனர், அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் மாதத்தின் ஒவ்வொரு 2வது வாரமும் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றது.

அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சிறார் திரைப்படங்கள் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் திரையிட வேண்டும். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் குழுக்களாக பிரித்து திரையிட வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் இச்செயல்பாடுகளுக்கென ஒரு ஆசிரியர் பொறுப்பளிக்க வேண்டும். ஆசிரியருக்கு தொழில்நுட்பம் மேலாண்மை திட்டமிடுதல் மற்றும் மாணவர்களை ஒருங்கிணைத்தல் சார்ந்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும். ஆசிரியர் மூலம் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் பிற ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சுழற்சி முறையில் பிற ஆசிரியர்களும் ஈடுபடுத்தல் வேண்டும்.

திரைப்பட காட்டி, தொலைக்காட்சி பெட்டி, ஒலிபெருக்கி இல்லாத பள்ளிகளில் பள்ளிமேலாண்மை குழுக்கள் வாயிலாக வாடகைக்கு பெற்று திரையிட வேண்டும். திரைப்படம் திரையிடப்படுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் திரைப்படம் குறித்து சிறு உரையாடல் நிகழ்ச்சி மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். திரைப்படம் முடிந்த பிறகு காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படத்தின் மைய கருத்து அல்லது தாக்கம் சார்ந்த ஒரு உரையாடலை மாணவர்களின் நிகழ்த்த வேண்டும். திரைப்படங்கள் குறித்த விமர்சனத்தை மாணவர்கள் எழுதி தரவேண்டியது கட்டாயம்.

ஒவ்வொரு மாதமும் திடையிடப்பட வேண்டிய திரைப்படத்திற்காக இணைப்பு பள்ளிகளுக்கு அனுப்பப்படும். பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்கள் ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களை மாவட்ட அளவில் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும். ஒரு முறை பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அடுத்த மாதம் தேர்ந்தெடுப்பில் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாதமும் எவ்வாறு மாவட்ட தேர்வு செய்யப்படும் மாணவர்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒரு முறை மாநில அளவில் நடைபெறும் சிறார் திரைப்பட விழாவில் பங்கேற்பார். நிகழ்வை கலைத்துறை சார்ந்த வல்லுநர்களோடு கலந்துரையாடுவார்கள். மாநில அளவில் பங்கேற்கும் மாணவர்களின் சிறந்து விளங்கும் 15 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு வெளிநாடு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். இந்த வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றி பள்ளியில் சிறப்பாக செயல்படுத்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அடமானம் வைத்த வீட்டு பத்திரம் மாயம்; வங்கிக்கு அபராதம்

நுகர்வோர் கோர்ட் அதிரடி உத்தரவு

திருப்பூர், ஆக. 27- நீலகிரி மாவட்டம் ஊட்டியை சேர்ந்தவர் டாக்டர் சஞ்சய் விஜயராஜ், இவரது மனைவி டாக்டர் சிந்துரா சஞ்சய்.

இவர்கள் கோவையில் புதுவீடு வாங்குவதற்காக, கடந்த 2007ம் ஆண்டு திருப்பூரில் உள்ள ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி கிளையில் ரூ.28 லட்சத்து 59 ஆயிரத்து 427 கடன் பெற்றனர். 15 ஆண்டுகள் தவணை போட்டும், 2013ம் ஆண்டுக்குள் கடன் முழுவதையும் செலுத்தி முடித்தனர். அதற்கான வங்கிக்கடன் முழுவதும் முடிந்தது என்ற உத்தரவையும் சஞ்சய் விஜயராஜூக்கு வங்கி வழங்கிவிட்டது. இதைத்தொடர்ந்து வீட்டு பத்திரத்தின் உண்மை ஆவணங்களை திருப்பிக்கொடுக்க வங்கியில் சஞ்சய் விஜயராஜ் விண்ணப்பித்தார். ஆனால் ஆவணங்கள் தொலைத்து விட்டதாக வங்கி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் கடந்த 2014ம் ஆண்டு திருப்பூர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இருதரப்பு விவாதம் நடைபெற்றது. வீட்டின் பத்திர ஆவணம் தொலைந்து கண்டுபிடிக்க முடியவில்லை என்ற சான்றை போலீஸ் நிலையத்தில் பெற்று, நாளிதழிலில் பிரசுரம் செய்து சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்து பத்திர நகலை ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி சஞ்சய் விஜயராஜிடம் வழங்க வேண்டும். மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்கு ரூ.1 லட்சம், வழக்கு செலவுத்தொகை ரூ.10 ஆயிரத்தை வங்கி, சஞ்சய் விஜயராஜிடம் வழங்கவும் நீதிபதி தீபா, உறுப்பினர்கள் பாஸ்கர், ராஜேந்திரன் உத்தரவிட்டனர்.

DALMIA SECURITIES PRIVATE LIMITED
'Ideal Plaza', Suite no. S-401, 4th Floor, 11/1, Sarat Bose Road, Kolkata - 700 020
CIN: U67120WB1993PTC060525
Tel No. (033) 6612 0500, (033) 2280 6544-49; Fax No. (033) 2280 6643
Email Id.: mb.sebiregn@dalmiasec.com
Website: www.dalmiasec.com

PUBLIC NOTICE

SURRENDER OF SEBI MERCHANT BANKER REGISTRATION BY DALMIA SECURITIES PRIVATE LIMITED

Dalmia Securities Private Limited is registered with Securities and Exchange Board of India (SEBI) as a **Category 1 Merchant Banker** under the Securities and Exchange Board of India (Merchant Bankers) Regulations 1992, bearing **Registration Number INM000011476**, which is valid on permanent basis.

As a part of business reorganisation, the Board of Directors have decided to discontinue the Merchant Banking Activities and surrender the **Category 1 Merchant Banker Registration**.

In view of the same, any aggrieved party may make any representation against the surrender before the company and /or SEBI within 15 days from the date of publication of this notice.

For, Dalmia Securities Private Limited
Sd/-
Vedant Dalmia
Director
Place : Kolkata
Date : 27.08.2022

இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு காலகாலேஸ்வரர் திருக்கோயில்
கோயில்பாளையம், கோவை - 107
மறு பொது ஏலம் / டெண்டர் அறிவிப்பு

மேற்படி திருக்கோயிலில் வாகன பாதுகாப்பு உரிமம் மறு ஒப்பந்தப்புள்ளி / மறு ஏலம் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் முன்னிலையில், மேற்படி திருக்கோயிலில் முன் மண்டபத்தில் 05.09.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும். மறு பொது ஏலம் / டெண்டரில் கலந்து கொள்வோர் ஏல இனத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள டெபாசிட் தொகையை "செயல் அலுவலர் அருள்மிகு காலகாலேஸ்வரர் திருக்கோயில், கோயில்பாளையம், கோவை" என்ற பெயரில் வங்கி வரைவோலை எடுத்து கொடுத்து கலந்து கொள்ளலாம்.

வ.எண்	இனங்கள்	பசலி காலம்	டேவணித் தொகை
1.	வாகன பாதுகாப்பு உரிமம்	பசலி 1432 06.09.2022 முதல் 30.06.2023 முடிய	ரூ.25,000/-

டெண்டர் படிவங்களை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதர நிபந்தனைகளை ஆலய அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்).ரா.தேவிப்பிரியா செயல் அலுவலர்
தொலைபேசி - 0422-2654546.
(ஒம்).வே.வெற்றிச்செல்வன் தக்கார்
இடம்: கோவை, நாள்: 24.08.2022
வெ.ஆ.எண்.596/2022/செ.ம.தொ.அ./கோவை
" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் "